மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்**.1** நீதிமன்றம்**,**
கொடைக்கானல்**.**
முன்னிலை**:** திரு**.K.**கார்த்திக்**, M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்**.1 (FAC),**
2023 ம் வருடம் ஜுன் மாதம் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை

**E.A.No.21/2018**
in
**E.P.No.12/2017**
in
**RCOP.No.15/2015**

K.அமுதவள்ளி ..... மனுதாரர்/மனுதாரர்/கட்டட உரிமையாளர்

/எதிர்/

1. லதா
2. சுதா ..... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்கள்

இன்று இந்த மனு என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/மனுதாரர்/கட்டட உரிமையாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.வாசுதேவன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜான் சேவியர் அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழக்கிடும்,

<u>உத்தரவு</u>

E.P.No.12/2017 ல் கடந்த 12.04.2018 ஆம் தேதி மனுதாரரின் வருகையின்மையினால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவினை ரத்து செய்து E.P.No.12/2017 மனுவினை மீண்டும் கோப்புக்கு எடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2.** மனுவின் சுருக்கம்</u>

தான் இம்மனுவின் மனுதாரர் என்றும், RCOP. No.15/2015 மனுவில் எதிர்மனுதாரர்கள் மீது வாடகைக்கு கட்டுப்பட்ட சொத்தை காலி செய்து ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்து கடந்த 31.07.2017 ஆம் தேதி தனக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றதாகவும், மேற்படி உத்தரவை நிறைவேற்றும் விதமாக E.P.No.12/2017 மனுவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் சார்வு செய்ய நான்கு முறை படி கட்டியுள்ளதாகவும், இந்த நிலையில் கடந்த 12.04.2018 ஆம் தேதியில் E.P.No.12/2017 மனு வாய்தாவிற்கு வந்த போது தன்னுடைய வழக்கறிஞர் உடல்நிலை சரியில்லாததாலும், தான் நீதிமன்றத்திற்கு ஆஜராவதற்கு

காரில் வந்த போது தான் பயணம் செய்த கார் பஞ்சராகி நின்று விட்டதாலும் உரிய நேரத்திற்குள் நீதிமன்றத்திற்கு வந்து ஆஜராக முடியாமல் சென்று விட்டதால் E.P.No.12/2017 மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், எனவே, E.P.No.12/2017 மனுவில் பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து மீண்டும் E.P.No.12/2017 மனுவை கோப்பிற்கு எடுக்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுவுரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு பொய்யும் புரட்டும் ஆனது, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். தனது வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், தான் பயணம் செய்த கார் பஞ்சர் ஆகிவிட்டது என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள போதிலும் பஞ்சராகிய வாகனத்தை சரி செய்வதற்கு பத்து நிமிடங்களே போதுமானது என்ற தருணத்திலும் இந்த மனுவினை காலம் தாழ்த்துவதற்காக மனுதாரர் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகாததால் இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்

மனுதாரர் தரப்பிலும், எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இரு தரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்நீதிமன்ற தீர்விற்கு எழுகின்ற பிரச்சினை யாதெனில்

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

## **6.** தீர்வு

இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன. RCOP. No.15/2015 மனுவில் மனுதாரருக்கு சாதகமாக உத்தரவு பெறப்பட்டதாகவும், அதனை நிறைவேற்றும் விதமாக E.P.No.12/2017 மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனு வாய்தாவிற்கு கடந்த 12.04.2018 ஆம் தேதி வந்தபோது தன் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், தான் வந்த வண்டி பழுதடைந்து விட்டதாகவும், எனவே நீதிமன்றத்திற்கு உரிய நேரத்தில் வரவில்லை என்றும், இந்த மனுவை தள்ளுபடி செய்தால் தனக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடியால் மனுதாரரின் மீது கருணை கொண்டு இந்த மனுவினை மனுதாரருக்கு ஆதரவாக அனுமதித்து உத்தரவிடலாம், அதுவே நீதியின் நலனுக்கு உகந்ததாக

இருக்கும் என்று குறிப்பிட்டு இம்மனுவில் மனுதாரர்/மனுதாரர்/கட்டட உரிமையாளருக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

7. இறுதியாக,

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு,
2. E.P.No.12/2017 மனுவில் கடந்த 12.04.2018 ஆம் தேதி மனுதாரரின் வருகையின்மையினால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட்டு, E.P.No.12/2017 மனுவினை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிடப்படுகிறது.
3. செலவுத் தொகை இல்லை.

இந்தத் உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 30.06.2023 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.06.30 12:33:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC),
கொடைக்கானல்.

இரு தரப்பிலும் பதிவு செய்யப்பட்ட வாய்மொழி சாட்சியங்கள் - இல்லை.

மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் - இல்லை.

எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் - இல்லை.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.06.30 12:33:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC),
கொடைக்கானல்.

**E.A.No.21/2018**
**in**
**E.P.No.12/2017**
**in**
**RCOP.No.15/2015**

**30.06.2023**

உத்தரவு பகரப்பட்டது.

இறுதியாக,

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு,
2. E.P.No.12/2017 மனுவில் கடந்த 12.04.2018 ஆம் தேதி மனுதாரரின் வருகையின்மையினால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட்டு, E.P.No.12/2017 மனுவினை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிடப்படுகிறது.
3. செலவுத் தொகை இல்லை.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.06.30 12:33:57 +0530

**DM-cum-JM.1 (FAC),**
**Kodaikanal.**